அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 255

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
.06. ஜூன், 1984.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

**விளையாட்டுக்களில் அல்லது விளையாட்டு சம்பந்தமான வேறு விவகாரங்களில் பங்குபற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பூரண சம்பளத்துடன் விசேட லீவு வழங்குதல்**

பின்வரும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் விளையாட்டுக்களில் அல்லது விளையாட்டுச் சம்பந்தமான வேறு விவகாரங்களில் பங்குபற்றும் ஓர் அரசாங்க உத்தியோகத்தருக்கு பூரண சம்பளத்துடனான விசேட லீவு வழங்க வேண்டும். அவர்,

(அ) விளையாட்டு வீரராக இலங்கையிலோ வெளிநாட்டிலோ ஏதேனும் ஓர் விளையாட்டுத்துறையில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துதற்கு தேர்ந்தெடுக்கப்படும் பொழுது,

(ஆ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தேசிய விளையாட்டுக் குழுவில் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் பொழுது,

(இ) ஒரு சர்வதேச விளையாட்டுப் போட்டி நடைபெறுவதற்கு முன் பயிற்சி முகாமுக்குச் செல்லும் பொழுது,

(ஈ) விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசக் கருத்தரங்குக்கு அல்லது சர்வதேசப் பயிற்சி நெறியையோ ஆலோசனையையோ பெறுவதற்குச் செல்லும் பொழுது,

2. இத்தகைய அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர்,

(அ) விளையாட்டுத்துறை அமைச்சின் அங்கீகாரம் பெற்ற தேசிய விளையாட்டு வீரராக சாதாரண பயிற்சி அமர்வில் பங்கு பற்றும் பொழுது,

(ஆ) இலங்கை அரசாங்க சேவை விளையாட்டுச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உள்ளூர் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றும் பொழுது,

(இ) அத்தகையதொரு போட்டியில் நடுவராக (அம்பயர்) அல்லது ஆலோசகராகப் பணியாற்றும் பொழுது,

திணைக்களத் தலைவர் தற்றுணிபுப்படி இந்த லீவை அவருக்கு வழங்கலாம்.

3. தாபனக் கோவையின் XII -ஆம் அத்தியாயத்தின் 12.5 ஆம் பிரிவும் 12.6 ஆம் பிரிவும் அதன் பிரகாரம் திருத்தப்படும்.

ஒப்பம்: டி. பி. ஜ. ப. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.